1973 நவம்பர் 22]

தொழிற் சங்கத்திற்கான உறுப்பினர் கட்டணம்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தொழிலாளர்களுடைய சம்பளத்திலிருந்து அவர்களது தொழில் சங்கத்திற்கான உறுப்பினர் கட்டணத்தைப் பிடித்தம் செய்து தருவதை நிர்வாகத்தினரே ஏற்றுக் கொள்கிற வகையிலான திட்டம் நமது மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், பொதுத்துறைத் தொழில்களில், கூட்டுறவுத் துறைத் தொழில்களில், தனியார் துறைத் தொழில்களில் எவை எவைகளில் அமுலாக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

State Housing Board

* 58. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the State Housing Board has made any efforts to acquire the lands now in the occupation of the Madras Race Club, Guindy, for putting up housing projects;

(*b*) if so, the details thereof; and

(*c*) if not, the reasons therefor?

மாநில வீட்டு வசதி வாரியம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, கிண்டியிலுள்ள சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தின் உடைமையில் தற்போதுள்ள நிலங்களைக் கையகப்படுத்த, மாநில வீட்டு வசதி வாரியத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை, ஐயா.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) இதற்கு குறிப்பிடத் தக்க காரணம் கூறுவதற்கு ஒன்றும் இல்லை.

Cases filed before the Commissioner of Hindu Religious and Charitable Endowments (Administration) Department.

* 59. *Q.*—THIRUVALARGAL S. VELLAPANDIAN AND V. ISVARMURTI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the number of cases filed before the Commissioner of Hindu Religious and Charitable Endowments (Administration) Department during the years 1965, 1966, 1967, 1968, 1969, 1970, 1971 and 1972; and

(*b*) the stage at which the matter now stands?

இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறை ஆணையாளர் முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் & திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறை ஆணையாளர் முன் 1965 முதல் 1972 வரை எத்தனை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன?

(இ) இவ்வழக்குகள் தற்போது எந்நிலையிலுள்ளன?

விடை

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) ஒரு விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

Renovation of Thiruvathigai Temple.

* 60 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the date on which the renovation of Thiruvathigai Temple commenced; and

(*b*) the date on which it would be completed?

@ 229–230 ஆம் பக்கத்தில் இணைப்புV ஆக அச்சிடப்பட்டுள்ளது.